# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0964/2016/ந

ஆணை எண்: 092/2017

நாள்: 04/05/2017

திரு. A. சுப்புராஜ்,
த/பெ. ஆறுமுகம்,
148/13, தந்தை பெரியார் நகர்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகாசி நகராட்சி, சிவகாசி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 15.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு 15.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0964/16-ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் சிவகாசி திருத்தங்கல் சாலையில் சிறுகுளம் கண்மாயின் கீழ்புறத்தில் குடியிருந்து வரும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரை வெளியேற்ற நகராட்சி முயற்சிப்பதாகவும், இப்பொருள் குறித்து உச்ச நீதிமன்ற வழக்கு நிலுவையிலுள்ளதாகவும் நகராட்சி ஆணையரது அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்படி வழக்கு முடியும் வரை தடுத்து நிறுத்தவும் உத்தரவிடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2 (8)ன் கீழ் உள்ள "சீர்கேடான நிர்வாகம்" எனும் வரையறைக்குட்பட்டுள்ள செயல்பாடுகள் ஏதும் உள்ளனவா என்பதனை பரிசீலித்திட முடிவு செய்யப்பட்டு இப்பொருள் குறித்து சிவகாசி நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர் 08.11.2016 அன்று ஆஜராகி விளக்கங்கள்/வாக்குமூலங்கள் அளித்திடுமாறு தெரிவித்து அழைப்பாணை அனுப்பப்பட்டது.

சிவகாசி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.10463/2012/எப்.1 நாள்:03.11.2016 வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது.

29.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்:-

"138 குடும்பங்கள் விருது நகர் மாவட்டம் திருத்தங்கல் சிவகாசி சாலையில் சிறு குளம் கண்மாய்கரையின் வெளிப்புறத்தில் குடியிருந்து வருகிறோம். கண்மாயின் உட்புறத்தில் 11.65 ஏக்கர் நிலத்தில், கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் கண்மாயின் வெளிபுறத்தில் குடியிருக்கும் ஏழைகளின் குடியிருப்புகளை அகற்றுவது சரியானதல்ல. சிவகாசியிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றாமல் எங்கள் பகுதி ஆக்கிரமிப்புகளை மட்டும் அகற்றியுள்ளனர். இது குறித்து அரசு ஆணை 867 நாள் 13.9.95ல் அரசு வருவாய் துறையால் ஒரு ஆணையிடப்பட்டுள்ளது அதில் நாங்கள் 25ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருவதாகவும் இந்த 138 ஆக்கிரமிப்பு மின் இணைப்பும், 2 ஆக்கிரமிப்பு குடிநீர் இணைப்பும், 10 ஆக்கிரமிப்புகளுக்கு தொலைபேசி இணைப்பும் கொடுக்கப் - பட்டுள்ளதாகவும். மேலும் வீடுகளை தவிர ஒரு சத்துணவு கூடமும், அரசு மகளிர் விடுதி ஒன்றும் கோவில் ஒன்றும் உள்ளது என்றும் மேற்கூறிய ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கும் பொழுது சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டதாகவும் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவது எளிதான காரியமாக தோன்றவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 13.9.1995-ல் நத்தமாக வகை மாற்றம் செய்து அரசு ஆணையிட்டதை தொடர்ந்து மேலும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இவற்றை ஒப்படைப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு அரசு ஆணையிட்டது. மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசால் அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் சிவகாசி வருவாய் கோட்டாட்சியரால் 18.8.2011ல் அனுப்பிய கடிதத்திலும் இந்த பகுதியில் சீர்மரபினர் 121 குடும்பத்தினர், பிற்படுத்தப்பட்டோர் 188 குடும்பத்தினரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 1 குடும்பமும், 20 முஸ்லீம் குடும்பங்களும் 5 கிறிஸ்தவ குடும்பங்களும் 1 ஆதி திராவிட குடும்பமும் 24 இதர வகுப்பை சேர்ந்த

குடும்பங்களும் உள்ளதாகவும் இவர்களில் தீப்பெட்டி தொழிற்சாலையில் கூலி வேலை செய்கிறவர்கள் 56 குடும்பங்களும், அச்சி கூலி செய்கிறவர்கள் 67 குடும்பங்களும், பட்டாசு தொழிற்சாலையில் கூலி வேலை செய்கிறவர்கள் குடும்பங்களும் இதர 181 குடும்பங்களும் குடியிருக்கிறார்கள். அவ்விடத்தில் ஓடையோ நீர்நிலையோ அல்லாத நில உடமை கணக்கில் தவறுதலாக மயானம் மற்றும் கிணறு என தவறாக பதிவு செய்ததையும் கண்மாயின் உட்பகுதியில் உள்ளதாகவும் சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் இந்த இடத்தை நீர்நிலை என தெரிவித்து பட்டா வழங்குவதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். நீதி மன்றத்திலும் தடையாணை உள்ளது. இந்த விசாரணையில் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் ஒன்றாக இணைந்து தங்கள் தொழிலுக்கு தேவையான தொழிலாளர்கள் கிடைக்காமல் போய்விடுவார்கள் என்ற கெட்ட நோக்கத்தில் தடை ஆணை பெற்றுள்ளார்கள் என்பது ஸ்தல விசாரணையில் தெரிய வருகிறது. எனவே சிவகாசி நகராட்சி பகுதி மற்றும் அதன் வட்ட பகுதியை சுற்றிலும் 9 பட்டாசு உரிமையாளர்கள் அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறார்கள் எனவும் அவர்களது பெயர் விவரங்களையும் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலே குறிப்பிட்ட 9 ஆக்கிரமிப்பாளர்களும் பட்டாசு தொழிலதிபர்கள் மற்றும் சிவகாசி நகரில் வசதி படைத்தவர்கள். இவர்களது இடங்கள் மட்டும் வரன்முறைபடுத்தப்பட்டுவிட்டன. இந்நிலையில் மேலே குறிப்பிட்ட

ஆக்கிரமிப்பாளர்கள் உறுப்பினர்களாக உள்ள சிவகாசி வரி செலுத்துவோர் சங்கத்தின் மூலம் ஏழை மற்றும் நடுத்தர குடியிருப்பு நிலத்தை காலி செய்வதற்கு நீதிமன்றத்தில் நீர் நிலை புறம்போக்கு என குறிப்பிட்டுள்ளார்கள். ஏற்கெனவே இவை அனைத்தும் நத்தமாக வகைமாற்றப்பட்டு மற்றும் பட்டா வழங்க ஆவண செய்ததாகவும் ஆனால் தொடர்ந்து பணக்காரர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்றுள்ளார்கள். இப்பொழுது வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த ஆக்கிரமிப்பை அகற்றும் பொழுது கணேசன் என்பவர் உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார், இருப்பினும் தற்போது கடைகளை மட்டும் இடித்துள்ளார்கள். சிறிய டீ கடையைக் கூட இடித்துவிட்டார்கள். வழக்கு முடியும் வரை ஆக்கிரமிப்புகளை அகற்ற கூடாது என உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டு வழக்கு நிலுவையில் உள்ளதால், நேர்மையான முறையில் சிவகாசியில் உள்ள எல்லா ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும். நகராட்சி ஊழியர்கள் பொதுமக்கள் எல்லோரையும் சமமாக எண்ணி நடத்த வேண்டுமென உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரரால், முறையீட்டு மனுவிலும், வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ள மாண்பமை உச்ச நீதி மன்ற வழக்கு தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு சிவகாசி நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை எண்.0964/2016/ந நாள்:02.12.2016 மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3629/2012/எப்1 நாள்: 28.02.2017ல் இப்பொருள் தொடர்பான ஆவண நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாண்பமை உச்ச நீதிமன்ற வழக்கு எஸ் எல் பி (Civil) எண்.20061 மற்றும் 20062/2008ல் 17.10.2016 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால ஆணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

"......no coercive steps be taken to vacate the encroachers except those who have consented to vacate voluntarily"

இவ்வாறு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இதில் இறுதி ஆணையிட இம்முறைமன்றம் விரும்பவில்லை.

நகராட்சி தரப்பில் சம்பந்தப்பட்ட விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் குடிமக்களை பாகுபாடு பார்க்காமல் அனைவரையும் சட்டத்தின் முன்பு சமமாக நடத்தப்பட வேண்டும், மாண்பமை உச்சநீதிமன்ற ஆணைகளை முழுமையாக செயல்படுத்தும் விதமாகவும் நடவடிக்கைகள் அமையவேண்டும் எனவும் குறிப்பிட்டு ஆணையிடப்படுகின்றது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. A. சுப்புராஜ்,
த/பெ. ஆறுமுகம்,
148/13, தந்தை பெரியார் நகர்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

நகராட்சி ஆணையர்,
சிவகாசி நகராட்சி,
விருதுநகர் மாவட்டம் - 626 123.

நகல்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   தஞ்சாவூர் மண்டலம்.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விருதுநகர் மாவட்டம்.